MISSION PRESS 1840

# சர்வவியாபி

SARVAVIABI

11-02-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் தை 29 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 112 பக்கம் - 12 | இதழ் 6
e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360
ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச்

## புதிய உரோமைத் திருப்பலி நூல் வெளியிடப்பட்டது.




கடந்த ஜனவரி 24 முதல் 25 வரை, தமிழக ஆயர் பேரவையின் அமர்வு சென்னை புனித தோமா மலைத் திருத்தலத்தில் இடம் பெற்றது. தமிழக ஆயர் பெருமக்கள் அனைவரும் பங்குகொண்ட இவ்வினிய தருணத்தில் ஜனவரி 24 ஆம் தேதி நடைபெற்ற சிறப்பு விழாவில் தமிழக, ஆயர் பேரவை - இறை பணிக் குழுவினரால் தமிழாக்கம் செய்யப்பட்ட 'புதிய உரோமைத் திருப்பலி நூல்' வெளியிடப்பட்டது. தமிழக ஆயர் பேரவைத் தலைவர் மேதகு **பேராயர் அந்தோணி பாப்புசாமி** அவர்கள் வெளியிட்டார், இதன் முதல் பிரதியை சென்னை-மயிலை **பேராயர் மேதகு ஜார்ஜ் அந்தோணிசாமி** அவர்கள் பெற்றுக் கொண்டார்; இரண்டாம் பிரதியை இப்பணிக் குழுவின் முன்னாள் செயலரும், மொழிபெயர்ப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான **அருட்திரு. ரோலிங்டன்** (தூத்துக்குடி மறைமாவட்டம்) அவர்கள் பெற்றுக் கொண்டார்.

புதிய உரோமைத் திருப்பலி நூல் இன்றைய அழகு தமிழ் சொல்லாடலுக்கு ஏற்ப, 2008 ஆம் ஆண்டு உரோமைத் திருப்பீடம் நமது முன்னாள் திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் அவர்கள் இலத்தீனில் வழங்கிய "மூன்றாவதாக திருத்தி அமைக்கப்பட்ட திருப்பலி நூலின்" அர்த்தங்கள் மாறாமல், சிறப்பு வார்த்தைகள் கையாளுகையில் வடித்தெடுக்கப் பட்டுள்ளது. "புதிய உரோமைத் திருப்பலி நூல்" திருப்பலி கொண்டாட்டங்களில் திருப்பலி - திருச்சடங்கு தலைமையும், பங்கேற்பாளர்களான இறைமக்களும் பொருளுணர்ந்து செயல்முறையில் கொண்டாடும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. நமது புதுவை-தமிழக ஆயர்களுக்கும், தமிழக ஆயர் பேரவை திருவழிபாட்டு பணிக்குழுவுக்கும், மொழியாக்கத்தில் அயராது உழைத்த அனைவருக்கும் மிகுந்த நன்றி கூறுகிறோம்.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்...

## நமது புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் D.D.,D.C.L. அவர்கள் தமது செய்தி மடலில் (பிப்ரவரி-2018), புதிய உரோமைத் திருப்பலி நூல் பற்றி வழங்கியுள்ள செய்தி சுருக்கம்:



**தி**ரிந்து நகர சங்கம் (1545-1543) அருள்சாதன கொண்டாட்டங்களுக்கு, மிகச் சிறப்பான வகையில் மிகவும் புனிதமான திரு நற்கருணைக்கு, மிகுந்த கவனம் செலுத்தியது. திருத்தந்தை புனித ஐந்தாம் பயஸ் (Pope St.Pius V) அவர்கள் Quo Primum என்னும் தமது திருத்தூது கோட்பாட்டு விளக்கத்தின் (Apostolic Constitution) மூலம், 14-7-1570 அன்று உரோமைத் திருப்பலி நூலை (Roman Missal) வெளியிட்டார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1962-1965) தனது "திருச்சங்கம்" (சாக்ரோசாங்தும் கொன்சீலியம்) என்னும் கொள்கை கோட்பாட்டு விளக்கம் மூலம், 1570-இல் வெளியிடப்பட்ட திரிந்து நகர உரோமை திருப்பலி நூலை (Revised Roman Missal) திருத்தி அமைக்க அடித்தளமிட்டது. திருத்தந்தை ஆறாவது பவுல் அவர்களால் 3-4-1969 அன்று திருத்தியமைக்கப்பட்ட உரோமைத் திருப்பலி நூல் வெளியிடப்பட்டது. இறைமக்கள் செயல்முறையிலும் பயனுள்ள விதத்திலும் திருப்பலி கொண்டாட்டத்தில் பங்குபெறும் நோக்கில், இறைவழிபாடு அவர்கள் தாய்மொழியில் இடம் பெற இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் அனுமதி அளித்தது. 1969-இல் வெளியிடப்பட்ட உரோமைத் திருப்பலி, திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் அவர்களால் மேலும் திருத்தி அமைக்கப் பட்டு 2002-இல் வெளியிடப்பட்டது (Editio Typica). திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் அவர்களால் மேலும் திருத்தியமைக்கப்பட்டு 2008-இல் வெளியிடப்பட்டது (Editio Typica Tertia).

மூன்றாவதாக இலத்தீனில் திருத்தி அமைக்கப்பட்டு 2008இல் வெளியிடப்பட்ட உரோமைத் திருப்பலி நூல், தமிழக ஆயர் பேரவையின் திருவழிபாட்டுப்பணிக் குழுவினால் தமிழாக்கம் செய்யப்பட்டது. ஆயர்கள், விவிலிய நிபுணர்கள், இறையியலார், திருவழிபாட்டு நிபுணர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோர் அடங்கிய இக்குழு மேற்கொண்ட இப்பணி ஒரு மாபெரும் பணியாகும். 2008 ஆம் ஆண்டின் உரோமைத் திருப்பலி நூலின் தமிழாக்கம் 16-05-2017 அன்று திருப்பீடத்தினால் (Apostolic See) முறையாக அங்கீகரிக்கப்பட்டது.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்...

**இந்த இதழில்...** ☞ புதிய உரோமைத் திருப்பலி நூல் வெளியிடப்பட்டது. ☞ நமது புதுவை-கடலூர் உயர்மறைமாவட்டத்தில்... ☞ விழுந்தவர்களும் எழுந்தவரும் ☞ மரியாயின் சேனை பாண்டிச்சேரி செனாத்தூஸ்... ☞ மீட்பரோடு மனிதம் ☞ இரக்கத்தைப் பெறுவோம்! இயற்கையைப் பேணிக் காப்போம். (தீ) ☞ உலக மீட்பர் காப்பியம் / யோசிக்காமல் செயல்படுவதின் விளைவுகள் ☞ இரண்டாம் வத்திக்கான்.../ விவிலிய போட்டி முடிவு ☞ இறை ஊழியர் லூயி சவினியன் துப்புய் ☞ இறைவனில் நிலைத்தவர்களுக்காக மன்றாட்டுக்கள்.

முதல் பக்கத் தொடர்ச்சி...

# திருப்பலி நூல் பற்றிய தமிழக ஆயர் பேரவையின் சுற்றுமடல்

இறை இயேசுவில் அன்பு நிறை அருள்பணியாளர்களே, துறவியரே, இறைமக்களே! உங்கள் அனைவருக்கும் தமிழக ஆயர்களின் நல்வாழ்த்துக்கள்!

இரண்டாம் வத்திக்கான் சங்கம் "திருவழிபாடு" பற்றிய கொள்கைத் திரட்டில் "திருவழிபாடு திரு அவையின் செயல் முழுவதுமே நாடிநிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திரு அவையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றாகவும் உள்ளது" (திவ 10) என்று குறிப்பிடுவதை காண்கிறோம். திருவழிபாட்டில் கிறிஸ்தவ வாழ்வின் மையமாக விளங்கும் நற்கருணைக் கொண்டாட்டத்தை ஒவ்வொரு நாட்டின் மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள் ஆகியவற்றிற்கு ஏற்பத் தழுவி அமைக்கவும், சில மாற்றங்களைப் புகுத்தவும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது (திவ 4,37-40,77).

**புதிய உரோமைத் திருப்பலி நூல்:**

திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் 10.04.2000 அன்று உரோமைத் திருப்பலி நூலின் திருத்தப்பட்ட மாதிரிப்படிவத்தை வெளியிட்டு, 2002-இல் அவரவர் தாய் மொழியில் அது மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். அதன்மூலம் கத்தோலிக்கத் திரு அவையின் இறைமக்கள் அனைவரும் திருவழிபாட்டின் உட்பொருளை நன்கு உணர்ந்து, அவரவர் வாழும் சூழலில் மொழி, பண்பாடு, ஆகியவற்றிற்கு ஏற்ப முழு ஈடுபாட்டோடு பங்குபெற்று, மீட்பைப் பெற திருப்பலி நூலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இவ்வழிகாட்டுதலை கருத்தில் கொண்டு, திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் 2008-ம் ஆண்டு வெளியிட்ட உரோமைத் திருப்பலி நூலின் திருத்தப்பட்ட மூன்றாம் மாதிரி படிவத்தை தமிழாக்கம் செய்ய, தமிழக ஆயர் பேரவை முடிவு செய்தது. இதன்படி இந்தத் தமிழாக்கம் இந்திய இலத்தீன் ஆயர் பேரவையின் ஒப்புதலோடு உரோமைத் திருவழிபாட்டு, அருளடையாளங்களின் ஒழுங்குமுறைப் பேராயத்தின் அனுமதியை மே 16, 2017-இல் பெற்றது.

**புதிய உரோமைத் திருப்பலி நூலின் சிறப்பியல்புகளும் தனித்தன்மையும்:**

1. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாட்டுக் கொள்கைத் திரட்டை நடைமுறைப்படுத்தவும், தாய்மொழிகளின் பயன்பாடு பற்றியும் புனித 2-ஆம் ஜான் பால் அவர்களால் கொடுக்கப்பட்ட 5-வது விதிமுறையான, *Liturgiam Authenticam*–இல் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் இம்மொழிபெயர்ப்பில் பின்பற்றப்பட்டுள்ளன.

2. இந்திய மண்ணின் புனிதர்கள் உள்படப் பல அருளாளர்களுக்கான மன்றாட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

3. சில சிறப்பான புனிதர்களுக்கான தொடக்கவுரை களும் இணைக்கப்பட்டுள்ளன.

அன்னை மரியாவுக்கென்று எட்டு நேர்ச்சித் திருப்பலிகள் இடம் பெற்றுள்ளன.

4. இந்தியப் பண்பாட்டுமயமாக்கலுக்கான பன்னிரெண்டு அம்சங்களும் இத்திருப்பலி நூலில் இடம் பெற்றுள்ளன.

5. அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் மொழிநடை, கருத்தாழம், பொருள்வளம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மூல மொழியாகிய இலத்தீனிலிருந்து இப்புதிய மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

6. திரு அவையின் ஒருமைப்பாட்டையும் ஒன்றிப்பையும் உணர்த்தும் விதமாகவும், மூல மொழிக்கு ஒத்திருக்கும் வகையிலும் இம்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளதால், இதுவரை நாம் பயன்படுத்திய பல வார்த்தைகள், பதிலுரைகள் மற்றும் வாக்கியங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

7. திரு அவையில் திருவழிபாட்டில் விவிலிய பகுதிகள் பயன்படுத்தப்படும்போது அவை திருவிவிலியத்தின் புதிய உல்காத்தா மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டு இப்புதிய மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை உள்ளன்போடு ஏற்றுச் செயல்படுவோம்.

8. நாம் நாள்தோறும் பயன்படுத்தும் அடிப்படைச் செபங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

திருவழிபாட்டில் இறைமக்கள் முழுமையாக பொருளுள்ள விதத்தில் பங்கேற்க, திருவழிபாடு பற்றிய விளக்கத்தை மக்களுக்கு வழங்க இப்புதிய நூல் ஒரு வாய்ப்பாக அமைகிறது. எனவே, அருள்பணியாளர்களும், துறவியரும் திருப்பலி நூல் பற்றிய விளக்கத்தை இறைமக்களுக்கு வழங்கி, திருப்பலியில் அவர்கள் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பங்கேற்று, கிறிஸ்துவின் மனநிலை கொண்டு சான்று வாழ்வு வாழ உங்களைக் அழைக்கின்றோம்.

**புதிய உரோமைத் திருப்பலி நூல் 24 ஜனவரி 2018-இல் செங்கல்பட்டு மறைமாவட்டம் புனித தோமையார் மலையில் நடைபெற்ற தமிழக ஆயர் பேரவையின் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. 2018-ஆம் ஆண்டு பிப்ரவரி 14-ஆம் தேதி திருநீற்றுப் புதனிலிருந்து தமிழகமெங்கும் நடைமுறைக்கு வருகிறது என்பதைத் தமிழக ஆயர் பேரவையின் சார்பாக அறிவிக்கின்றோம். இதுவரை பயன்பாட்டில் இருந்துவரும் பழைய திருப்பலி புத்தகத்தை, இனி பயன்படுத்தக்கூடாது என்பதை தெரிவித்து கொள்கிறோம்.**

இத்திங்கள் பிப்ரவரி 14, 2018 முதல் இப்புதிய உரோமைத் திருப்பலி நூலை மட்டுமே அனைவரும் பயன்படுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

இறை ஆசியும், அன்னை மரியின் பரிந்துரையும் என்றும் உங்களோடு இருப்பனவாக!

27.01.2018 கிறிஸ்துவில் என்றும் அன்புடன்,
சென்னை **+ மேதகு முனைவர் அந்தோனி பாப்புசாமி**
தலைவர், தமிழக ஆயர் பேரவை

**குறிப்பு:** பிப்ரவரி 4 (அல்லது 11), 2018 ஞாயிறு திருப்பலியின்போது அருள்பணியாளர்கள் இச்சுற்றுமடலை வாசித்து தகுந்த விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(நன்றி: புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட செய்திமடல், பிப்ரவரி 2018.) தொகுப்பு: - ஆசிரியர். ●

முதல் பக்கத் தொடர்ச்சி... **நமது புதுவை-கடலூர்...**

புதிய உரோமைத் திருப்பலி நூல் (தமிழில்) 24-01-2018) அன்று சென்னை தூய தோமா தேசிய திருத்தலத்தில், தமிழக-புதுவை ஆயர்களால் வெளியிடப்பட்டது. 14-02-2018 சாம்பல் புதன் முதல் இப்புதிய உரோமைத் திருப்பலி நூல் நடைமுறைக்கு வருகிறது. எனவே, புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டத்தைச் சார்ந்த அனைத்து அருட்பணியாளர்களும், உயர் மறை மாவட்டத்தில் பணிபுரியும் மற்ற அருட்பணியாளர்களும் 14-2-2018 முதல் இந்த புதிய உரோமைத் திருப்பலி நூலை மட்டுமே திருப்பலிக்கு பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இப்புதிய திருப்பலி நூல் பற்றி தமிழக ஆயர் பேரவை வெளியிட்டுள்ள சுற்று மடலின் சிறப்பு கருத்துக்களை வரும் 4-2-2018 (அ) 11-2-2018 அன்று பங்குதந்தையர் இறைமக்களுக்கு வாசித்து விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நன்றி: புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட செய்திமடல், பிப்ரவரி 2018. தமிழில் - ஆசிரியர்.) ●

வாரச் சிந்தனை

தவக்காலம் முதல் ஞாயிறு (18-02-2018) தொ.நூ.9:8-15 1பேதுரு.3:18-22 மாற்கு.1:12-15.

# "விழுந்தவர்களும் எழுந்தவரும்"



அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.

கடந்த சாம்பல் புதன் அன்று நாம் தவக்காலத்தை ஆரம்பித்தோம். தவக்காலம் இறை இரக்கத்தின் காலம். மன்னிப்பின் காலம், கடவுளுக்கும் நமக்கும் உள்ள அன்பை அலசி ஆராய்ந்து பார்க்கின்ற காலம். இத்தவக் காலத்தில் வருத்த வேண்டியது உடலை மட்டுமல்ல, உள்ளத்தை. உணவை மட்டுமல்ல, உள்ளத்தின் சுயநல ஆசைகளை. இதுவே உண்மையான மனமாற்றமாகும் இறை வார்த்தை களை இதயத்தில் ஏற்கவும், விவிலியச் சிந்தனைகளை விருட்சமாக்கவும், தேவையற்ற ஆடம்பரங்களுக்கு தடைபோடவும், ஆத்திரங்களை அமைதியாய் வெல்லவும், உள்ளத்திற்கு ஊட்டச்சத்து கொடுக்கவும், இதய உறவுகளை இணைத்துக் கொள்ளவும், கல்லான இதயத்தில் கருணை நீர் பாய்ச்சவும், பகையைக் களைந்து பாசத்தை உருவாக்கவும், புண்பட்ட காயங்களுக்கு மருந்து கொடுக் கவும், சோதனையில் வீழ்ந்து விடாமல் இயேசுவைபோல எழுந்து வீறுநடை போடவும் இத்தவக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

**சோதனைகள்:** சோதனை என்பது மனித வாழ்வில் பின்னிப் பிணைந்த ஒன்று. சோதனை இல்லாமல் மனித வாழ்வே கிடையாது. உலகம் தோன்றிய முதலே சோதனை யின் வேர் மனித வாழ்வை துளையிட ஆரம்பித்துவிட்டது. முதல் பெற்றோரின் பாவத்திற்கு, வீழ்ச்சிக்கு அதுவே காரணம் என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்று. சோதனைகள் நல்லவைகள், நம்முடைய வாழ்விற்கு தேவைதான். காரணம், பொன்னானது உலையிலே நன்கு புடமிடும் போது தான் அது நன்றாக, அழகான, தங்கமாக காட்சியளிக்கின்றது. சிற்பியானவன் கல்லை செதுக்க செதுக்கத்தான் அது ஒரு சிற்பமாக காட்சியளிக்கின்றது. அறிவியல் விஞ்ஞானிகூட சோதனைக் குழாய் மூலம் ஆராய்ச்சியை செய்ய செய்யத் தான் அறிவியல் கண்டு பிடிக்கிறார். அதுபோல நம்முடைய கிறிஸ்தவ வாழ்விலும் சோதனை கள்தான் எது நல்லது எது தீயது என்று பகுத்தாய்ந்து அழைத்துக்கொள்ள உதவுகின்றது. இன்றைய இறை வார்த்தை மூலமாக யார் தங்களுக்கு கொடுக்கப்பட்ட சோதனையில் வீழ்ந்து போனார்கள். யார் அந்த சோதனையை சாதனையாக்கி எழுந்து வீறுநடை போட்டார்கள் என்று தியானிப்போம்.

**சோதனையில் விழுந்தவர்கள்:** இன்றைய முதல் வாசகத்தில் வாசித்தோம். இஸ்ராயேல் மக்கள் சோதனையில் வீழ்ந்து போனார்கள், பாவம் செய்தார்கள் கடவுளை விட்டு தொலைவில் சென்றார்கள். "மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களுடைய இதயச் சிந்தனைகள் எல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக அவரது உள்ளம் துயரம் அடைந்தது" (தொ.நூ.6:5). எனவே பாவச் சேற்றில் மூழ்கிக் கிடந்த உலகத்தை, மக்களை வெள்ளப் பெருக்கினால் அழித்துவிட்டு, நோவாவையும் அவரது குடும்பத்தையும், புதிய படைப்பின் தொடக்கமாக விளங்கச் செய்தார். கடவுள் தன் அன்பால் புதுப்பித்து நோவாவுடன் உடன்படிக்கை செய்தார். கடவுள் இரக்கமுள்ளவர், நேர்மையானவர், எளியோரை நேர்வழியில் நடத்தி அவர்களுக்கு தம் புதிய வழித்தடங்களை கற்பிப்பவர் என்று எண்பித்தார். இவ்வாசகத்தில் "உடன்படிக்கை" என்ற சொல் 5 முறை பயன்படுத்தப்படுகிறது.உடன்படிக்கை என்பது இரண்டு பேர் உடன்பட்டு ஓர் அமைப்பை அல்லது தீர்ப்பை ஏற்றுக்கொள் வதாகும். இங்குக் கடவுள் நோவாவோடும் அவர் புதல்வர்கள் மற்றும் உயிரினங்களோடும் உடன்படிக்கை செய்கிறார். வெள்ளத்திற்குப்பின் அன்பின் வெளிப்பாடு இவ்வுடன்படிக்கை எனலாம். கடவுள் தன் அன்புப் பெருக்கால் தூண்டப்பட்டு "சதை உள்ள எந்த உயிரும் வெள்ளப்பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது (9:11) என்று உறுதிமொழி தருகிறார். அதற்கு சான்றாக வானவில்லை நியமிக்கிறார். இதன் அர்ததம் கடவுள் தம் மக்களை தம் படைப்பை நேசிக்கிறார் என்பதாகும். இத்தகைய அன்புக் கடவுளுக்கு நாம் பதிலன்பு காட்ட வேண்டாமா?

**சோதனையிலிருந்து எழுந்தவர்:** பாலைநிலம் என்பது சோதனை ஏற்படுகின்ற இடம் என்றும், கடவுளைச் சந்தித்து அனுபவம் பெறுகின்ற இடம் என்றும் இரு பொருள் கொண்ட உருவகமாக விவிலியத்தில் வருகிறது. இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு சோதிக்கப்பட்ட நிகழ்ச்சியை மாற்கு சுருக்கமாகவும், மத்தேயு மற்றும் லூக்கா விரிவாகவும் பதிவு செய்துள்ளனர் (மத்.4:1-11; லூக்.4:1-13). அதாவது கல்லை அப்பமாக்கும் சோதனை, கோவில் உச்சியிலிருந்து கீழே குதிக்கும் சோதனை. அலகையை வணங்குவதற்கான சோதனை. இந்த அனைத்து சோதனைகளின் போது கடவுளின் உடனிருப்பை தெளிவாக இயேசு உணர்ந்தார். இயேசுவின் சோதனைக் காலம் உண்மையிலேயே இறைவனுபவக் காலமாக மாறிற்று. நமக்கும் பாலை நிலச் சோதனைகள் வருவதுண்டு. கடவுள் நம்மை விட்டு அகன்றது போன்று நிலை ஏற்படுவதுண்டு. அவ்வேளையில் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்னும் உள்ளுணர்வு நம்மைவிட்டு அகன்றுவிடக்கூடாது. எனவே இயேசு எவ்வாறு தனக்கு ஏற்பட்ட சோதனையில் விழுந்து விடாமல் சோதனைகளை சாதனைகளாக்கி எழுந்து வீறுநடை போட்டாரோ அதுபோல் நாமும் பயணிப்போமா?

**தூய ஆவியின் துணையோடு:** மனிதரிடமிருந்தும், தீயோனிடமிருந்தும், சோதனைகளும், துன்பங்களும் வந்தாலும் நாம் தனித்து விடப்படுவதில்லை. மாறாக இறைவன் தனது உதவிகளை தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருக்கிறார். துன்பங்களும் சோதனைகளும் தவிர்க்க முடியாதவை என்றாலும் அவற்றை எந்த மனநிலையோடு சந்திக்கிறோம் என்பதைப் பொருத்தே நம் வாழ்வின் உயர்வும், தாழ்வும் மகிழ்ச்சியும், இகழ்ச்சியும் அடங்கியுள்ளது. "தூய ஆவியால் இயேசு பாலைநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்" என்கிறார் மாற்கு நற்செய்தியாளர். தூய ஆவியின் துணையோடு சோதனைகளையும், துன்பங் களையும் சந்தித்த இயேசு, அவற்றிலிருந்து நற்செய்தி யோடும் மகிழ்ச்சியோடும் வெளியே வந்தார். அந்த நற்செய்தி யின் மகிழ்ச்சியைத்தான் இயேசு சென்ற இடமெங்கும் பரப்பினார். எனவே தூய ஆவியின் துணையோடு சோதனை களை, துன்பங்களை சந்திக்கின்ற மக்கள் புதுவாழ்வோடும் மகிழ்ச்சியோடும் வெளியே வருகின்றனர். அதே நேரத்தில் தூய ஆவியின் துணையில்லாமல் சோதனை, துன்பங்களை சந்திக்கின்றவர்களுக்கு கிடைப்பதோ வெறுப்பான மனநிலையும், சோர்வும் தான் என்பது நமது அன்றாட வாழ்க்கைப் பாடம். எனவே நாம் முதல் வாசகத்தில் கேட்ட இஸ்ராயேல் மக்களைப் போன்று பாவச் சேற்றில், சோதனையில் வீழ்ந்து கிடப்பவர்களா? அல்லது இயேசுவை போன்று சோதனைகளை, துன்பங்களை வென்று எழுந்து வீறுநடை போடுபவர்களா? சிந்திப்போம், செயல்படுவோம். ●

# மரியாயின் சேனை - பாண்டிச்சேரி செனாத்தூஸ்

பாண்டி-கடலூர் உயர் மறைமாவட்டம் மற்றும் தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், தர்மபுரி துணை மறைமாவட்டங்களை உள்ளடக்கிய, மரியாயின் சேனை மேல்நிர்வாக சபை "பாண்டிச்சேரி செனாத்தூஸ்" பதினான்காம் ஆண்டு நிறைவு விழா மற்றும் புதுப்பிக்கப்பட்ட அலுவலகம் திறப்பு விழா கடந்த 21-01-2018 அன்று காலை 9.30 மணி முதல் 1.30 மணிவரை புதுவை, புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலய வளாகத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு பேராலயத்தில் சேனை ஆரம்ப செபம், செப மாலை சகோ.C.அந்தோணி அவர்களால் ஆரம்பிக்கப் பட்டது.



காலை 10.00 மணிக்கு புதுவை-கடலூர் உயர் மறை மாவட்ட பேராயர் மேதகு டாக்டர் அந்தோணி ஆனந்தராயர் அவர்கள் தலைமையில் 9 அருட்தந்தையர்கள் சிறப்பு கூட்டு திருப்பலி நிறைவேற்றப் பட்டது. சேனை சங்கிலி செபம் பொருளர் சகோ. ஷீலா அவர்களால் சொல்லப்பட்டது. 11.30 மணிக்கு செனாத்தூஸ் அவலுவலகம் முகப்பு சுவற்றில் அமைக்கப்பட்ட அழகிய மாதா சுரூபம் பேராயர் அவர்களால் மந்திக்கப்பட்டு, ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து செனாத்தூஸ் அரங்கம் மற்றும் அலுவலகத்தில அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாதா பீடமும் பேராயரால் அர்ச்சிக்கப் பட்டது.



நண்பகல் 12.00 மணிக்கு பேராலய வளாகத்தில் அமைக்கப்பட்ட மேடையில் இளையோர் பிரசீடிய பிள்ளைகளின் வரவேற்பு நடனத்துடன் விழா நிகழ்வு தொடங்கப்பட்டு, செனாத்தூஸ் தலைவர் சகோ. C. அந்தோணி அனைவரையும் வரவேற்று, சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை அணிவிக்கப்பட்டது. செயலர் சகோ. A. விக்டர் அவர்களால் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது.



செனாத்தூஸ் ஆன்ம இயக்குனர் அருட்தந்தை A. தாமஸ் அவர்கள் தொடக்க உரையாற்றி, சேனையாளர் களின் பணிகளை பாராட்டினார். புனரமைப்பு குழு தலைவி சகோ. ரெஜினா அகஸ்டின் அவர்கள் இப்பணிக்காக, செபித்தவர்கள், நன்கொடை அளித்தவர்கள் மற்றும் பணி செய்த அனைவருக்கும் நன்றியும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். கட்டிட பொறியாளர் திரு. ரீமன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பத்ரிசிய பொறுப்பாளர் சகோ. லைலா பெர்ட்டி அவர்கள், பத்ரிசிய கூட்டம் நடத்துவதால் சேனையாளர்கள் விவிலியத்தைப் பற்றிய தெளிவான விளக்கங்களை தெரிந்து கொள்ளலாம் என்று கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர் R. சிவா அவர்கள் கத்தோலிக்கர்கள் மதம் என்று பாராமல் மனித நேயத்துடன் பணி செய்கிறீர்கள் என்று கூறி தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார். மிஷன் அச்சக மேலாளர் அருட்தந்தை அந்தோனி ரோச் அவர் கள், மறைவட்ட முதன்மை குரு அருட்தந்தை அல்போன்ஸ் சந்தனம் அவர்கள், மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஆ.அருளானந்தம் அவர்களும், பேராயர் அவர்களும் ஆலோசனைகளையும், பாராட்டுக்களையும் கூறி வாழ்த்துரை வழங்கினார்கள்.

மேதகு பேராயர் அவர்கள் தமது வாழ்த் துரையில் மரியாயின் சேனை செனாத்தூஸ் புதுவைக்கு கொண்டு வந்த பெருமை முன்னாள் பேராயர் மேதகு S. மைக்கேல் அகுஸ்தீன் ஆண்டகை அவர்களையே சாரும். அப்போது முதன்மை குருவாக இருந்த அருட்தந்தை நெல்லிக் குன்னம், செனாத்தூஸ் அலுவலகத்தை கட்டிக்கொடுத்த அருட்தந்தை அடைக்கலசாமி மூவரும் தற்போது நம்மிடம் இல்லை. ஆனால் அவர்களின் நினைவு நம்மிடம் இருந்துகொண்டே இருக்கும். தொடர்ந்து அவர்களுக்காக செபிப்போம் என்றும் செனாத்தூஸ் அலுவலகம் அழகாக புதுப்பிக்கப்பட்டதற்கு பாராட்டு களையும், சேனையாளர்களுக்கு வாழ்த்துக்கள் கூறி ஆசீர் அளித்தார்கள்.



சேனை இறுதி செபம் துணை பொருளர் சகோ. அவர்களால் சொல்லப்பட்டது. துணை தலைவி சகோ ஏஞ்சலின் அவர்களால் நன்றிகூறப்பட்டது, மாதா பாடலுடன் விழா இனிதே முடிவுற்றது.1200 க்கும் மேற்பட்ட சேனை யாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப் பட்டது. விழா ஏற்பாடுகளை கடிதத் தொடர் பாளர்கள் மற்றும் இளையோர் கியூரியா சேனை யாளர்கள் பொறுப்பேற்று செய்தார்கள். விழாவின் அனைத்து நிகழ்வுகளையும் துணை செயலர் சகோ. A. அந்தோணி ராஜ் தொகுத்து வழங்கினார்.





செய்தி: திரு. C.அந்தோணி, தலைவர், பாண்டிச்சேரி செனாத்தூஸ்.



# மீட்பவரோடு மனிதம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

"உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்." கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல, வாழ்வோரின் கடவுள். இறப்பின் பிடியில் சிக்குண்ட மனித இனத்தை, இறைவனே, மனித உரு எடுத்து, தனது இறப்பின் வழியாக மனித குலத்தை மீட்டு, உயிர்த்தெழச் செய்து கொண்டு வருகிறார். மீட்பர் முதலில் படைக்கும் வாக்காக விளங்கி வருகிறார். அவரே நம்மோடு வாழும் தெய்வமாகவும் இருக்கிறார். படைப்பவரோடு மனிதம் இரண்டறக் கலந்துள்ளது. மீட்பரோடு உடலிலும் ஆவியிலும் ஒன்றித்திருக்கின்றது, புனிதத் தன்மையில் தூய ஆவியில் உறைந்திருக்கிறது. இந்த மாபெரும் மறைபொருளில் மனிதம் மலர்க, வளர்க, நிறைவடைவதாக. நீங்கள் அடிமைகள் அல்ல, நண்பர்கள் என பயணிப்போம்.

**முழுமையான மீட்பு:** கடவுள் படைக்கின்ற அனைத்தையும், தூய ஆவியின் வல்லமையால், கன்னிமரி உதரத்தில் கருதரித்து, பாஸ்கு நிகழ்வு வழியாக இயேசுகிறிஸ்து மீட்டார் என்பது நம்பிக்கையோடு கூடிய வரலாற்று நிகழ்வாகும். படைப்பும், மனிதமும், மற்றதெல்லாம் தளைகளிலிருந்து இயேசுவால் வென்றெடுக்கப்படுகிறது. அடிமைப்பட்டிருக்கும் படைப்பையும், மனித குலத்தையும் அன்று மட்டுமல்ல, என்றும் மீட்டு வருகின்றார் இயேசு என்பதில் விசுவாசத்தை வளப்படுத்திக் கொள்வோம்.

கடவுள் இருப்பதும் இயங்குவதும் எப்போதும் முழுமை யான நிகழ்வாகும் என்பதால் அனைத்தும் மீட்பைப் பெற்று வருகிறது, இதை உணர்ந்தவர்கள் திருமுழுக்கினால் தெளிவாக, எதார்த்தமாக, திருச்சபையாக அடையாள மாகின்றனர். இவர்கள் வழியாக ஏனையோரும் தாங்கள் மீட்கப்பட்டதை உணரவும், உணர்வதை சுதந்திரமாக வெளிப்படுத்தவும் திருச்சபையால் அதைவிட மேலாக இறைவனால் அழைக்கப்பட்டு வருகின்றனர். மீட்பை வெளிப்படையாகப் பெற்றுக்கொண்டவர்களும் முழுமை யான மீட்பை வெளிப்படையாகப் பெற்றுக்கொண்டவர்களும் முழுமையான மீட்பைப் பெற தொடர்ந்து விழிப்போடு இருக்க வேண்டும், இல்லையேல் அடிமை வாழ்வுக்கு மனித பலீவனத்தில் ஈர்க்கப்படுவர். விழிப்பாய் இருந்தால் விடுதலையை வாழ இயலும், இல்லையேல் சோதனைகட்கு ஆளாக வாய்ப்புண்டு.

**திருச்சபையில் மீட்பு:** இயேசுவில், இறைவனில் எல்லாம் இயல்பாக, ஒரே முறையில் முப்பெரும் பணிகளும் இடம் பெற்று வருகின்றன. ஆனால் மனித குலத்தில் முப்பெரும் பணி அனுபவமும் தொடர்ந்து இடம்பெற்று, வாழ்நாள் முழுவதும் தொடரும் செயலாக உள்ளது. "மீட்கப்பட்ட வர்கள்" என்று பல்வேறு நிலைகளைப் பிரிவுபடுத்தாது, அனைவரும் கடவுளுக்குரிய முறையிலும், மனிதத் தன்மைக்குரிய முறையிலும் மீட்பை அனுபவித்து, முழுமையான மீட்பை நோக்கி அனைவரும் பயணித்து வருகிறோம்.

திருச்சபையிலும் உலக சமூகத்திலும் பல்வேறு சமயங்களிலும் நாம் காணும் பிரிவுகளையும், பிளவுகளை யும் புரிந்துகொண்டு, ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்துவது தேவைப்படுகிறது. பிளவுபடுத்தும் தன்மையைவிட ஒன்று படுத்தும் தன்மையில் தான் உயிர்த்த ஆண்டவர் செயல்பட்டு வருகின்றார். இன்றையத் திருஅவையை இரக்க உணர்வோடு கண்டால் நிறைகுறைகளோடு கடவுளைப் போல ஏற்றுக்கொள்ள அழைக்கப்படுகின்றோம். மதிப்பீட்டின் அடிப்படையிலும் கண்டால், அவண் திருச்சபையை காணமுடியாது. ஏனெனில் அவண் இருக்கும் உயிர்த்த ஆண்டவரை அனுபவிக்காமல் இருக்கிறோம், இணையாமல் இருக்கிறோம் என்றுதான் கவலைப்படுவோம். ஆழத்திற்குச் சென்றால்தான் உயிர்த்த ஆண்டவரைச் சந்திக்க இயலும், விளிம்பில் இருந்தால் சடங்குகளைத் தான் காண்போம். அகம் எழுச்சிபெற புறம் அமைதியாக்கப்படுதல் தேவை.

**மீட்பும் மனிதமும்:** பொதுவாக மனிதம் மீட்கப்பட்டு வருகிறது. ஆண்டவருடைத் திட்டத்தை நாம் அளவிட முடியாது. திருச்சபையின் வழியாகவும் மீட்பு இடம் பெற்று வருகிறது. தனி ஒருவர் வாழ்விலும், குழுவிலும் மீட்பு பல்வேறு நிலைகளில் இடம் பெற்று வருவதை நாம் எளிதாக மறந்து விடக்கூடாது. கடவுளின்கருணையால் நிபந்தனையற்ற முறையில் மீட்பு இடம் பெற்று வருகிறது என்று நம்புவது மேலானது. நாம் உணர்ந்து மீட்பை சுவைப்பது அளவுக்கும், ஆய்வுக்கும், விமரிசனத்திற்கும் விளக்கத்திற்கும் ஆளாக முடியும்.

வாழ்வு என்னும் சிலுவைப் பாதையில் இயேசுவின் சிலுவைப் பாதை அனுபவத்தை அனைவரும் அனுபவிப்பது என்பது எதார்த்தம். சந்திப்பு, உதவி, வீழ்தல், எழுதல், துன்ப்படுதல், தூய்மைப்படுதல், பறிப்பது, இழப்பது, உயர்த்துவது, தாழ்த்துவது, இறத்தல், உயிர்த்தல் என நாம் அனுபவிப்பது பொதுவானதாகும். இன்று பலர் சிலுவையின்றி உயிர்த்தெழ விரும்புகின்றனர். உழைக்காமல் ஊதியம் பெற விரும்புகின்றனர், கஷ்டமில்லாமல் காசு சேர்க்க விரும்புகின்றனர். இதனால் ஏழைகள்தான் எல்லாவிதத் திலும், எங்கும் பாதிக்கப்படுகின்றனர். இவைகளைத் தான் இன்றைய உலகம், அரசுகள், சமயங்கள், சாஸ்திரங்கள் முன்னிலைப்படுத்தி மீட்பைத் தொடர்வது தேவை.

**மீட்பில் நம்பிக்கை:** யாரும், எந்த சூழ்நிலையில் இருப்பினும், உயிர்த்த ஆண்டவர் என்றும் எல்லாருடனும் இருப்பது உண்மை. எனவே அஞ்ச வேண்டாம், அவநம்பிக் கைக்கு ஆளாக வேண்டாம். இத்தகைய நம்பிக்கையின் நாயகனாக உயிர்த்த ஆண்டவர் திருச்சபையிலும் சமூகத்திலும் இருப்பதையும் இயங்குவதையுமே நமது நம்பிக்கையாக நாளும் வாழ்வோம். இத்தகைய நம்பிக்கை மனித குலத்தில் வளர விழிப்போடு திருச்சபை மன்றாடுவதாக. நம்பிக்கையை பலவீனமாக வைத்திருந்து வேதனைப் படுவோரை நினைத்து நாளும் மன்றாடுவோம். உடனிருப் பவர்களுக்கு நம்பிக்கையின் துண்டுதாலக விளங்குவோம். குறை கூறுவதைவிட அவருடைய பிரசன்னத்தை அனைவரிலும் கண்டு நம்பிக்கையை வளர்த்துவிடுவோம், வேண்டுவோம். நம்பிக்கையின் நாயகனே வாழி! ●


**குணமளிக்கும் நற்செய்தி ஆராதனைக் கூட்டம்**

**நாள்: 17-02-2018 (சனிக்கிழமை)**

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப்பணி** & **கலைத்தொடர்பு நிலையம்.** (புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய வளாகம்) உப்பளம், பாண்டிச்சேரி-1.

**மையக் கருத்து: "தவக்காலம்-உண்மையான நோன்பு"**

**நடத்துபவர்:** அருட்தந்தை I.**அடைக்கலசாமி**

(குடந்தை மறைமாவட்டம் "வைணவமும் கிறித்துவமும் ஒப்புமை" - முனைவர் ஆராய்ச்சி மாணவர் சென்னை பல்கலைக்கழகம்)

**அழைப்பவர்:** அருள்தந்தை **பீலோ**, இயக்குநர்

மற்றும் மைய செப தயாரிப்புக் குழுவினர், புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்புநிலையம், உப்பளம், புதுவை-1.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363



# இரக்கத்தைப் பெறுவோம்! இயற்கையைப் பேணிக் காப்போம்.

சென்ற இதழ் தொடர்ச்சி... – *வெட்டிவயல் வளவன்* –

**5 "தீ (நெருப்பு):** அமெரிக்க ஐக்கியநாட்டின் கலிஃபோர்னியாவில் பரவியுள்ள காட்டுத் தீயால், ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதம், மற்றும் பொருள் சேதம் குறித்து, கவலை தெரிவித்துள்ள அதே வேளை, இப்பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருத்தந்தையின் செபத்தையும் தோழமையையும், தெரிவிக்கும் தந்திச் செய்தி ஒன்றை அனுப்பி உள்ளார் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின். 21 இடங்களில் 30 பேர் இறப்பு; 400 பேர்கள் காணவில்லை; இருபதாயிரத்துக்கு மேற்பட்டார் புலம் பெயர்ந்து உள்ளனர்; ஆயிரக்கணக்கானோர் வீடுவாசல், தொழிலகங்களும், கட்டிடங்கள் பாழடைந்துள்ளன. பிரேசில் நாட்டு பள்ளி ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் பலியானவர்கள், காயமுற்றவர்களை, மற்றும் அவர்தம் குடும்பங்களுக்கு, திருத்தந்தையின் செபத்தையும் தோழமையையும் தெரிவிக்கும் செய்தியையும் கர்தினால் பரோலின் அனுப்பியுள்ளார். (நம்வாழ்வு 29-10-17). பல ஆண்டுகளுக்கு முன், 96 மலர்கள் ***கும்பகோணம் பள்ளி பள்ளித் தீ விபத்தில்*** கருகினவே! இது போன்ற பல "தீ" ச் செயல்கள் - விபத்துக்கள் நம் கண்ணீரால் குளமாவதை காணலாம் இன்றும்!

"எங்கு இரக்கம் உள்ளதோ அங்கே இறைவன் இருக்கிறான்" என்ற புனித அம்புரோசியாரின் வார்த்தைகளை நினைவு கூறும் திருத்தந்தை, சொந்த நாட்டில் ரோகிங்யா முசுலிம் மக்கள் மியான்மரில் படும் துயர்களை களையவும் விடுதலை பெறவும் பயணம் செய்கிறார். நல்ல சமாரியனின் பரிவு இருதயத்தில் நின்று எழ வேண்டும். "ஐயோ, பாவம்" என்று கூறுவதில் மட்டும் பரிவு வராது. இன்று தீமை மலியக் காரணண், இந்த மனநிலையேதான். மனித சமூகம் நீதி-உரிமை-மாண்பில் வளர இளைஞர் எழுக அழைக்கிறார் திருத்தந்தை. வன்முறையை தீயிடல் பாலியல் வன்கொடுமை, கொலை-பிற) அகற்ற செயலற்ற மனநிலையில், சிக்கி உள்ள தீமைகளில் இருந்து உலகை மீட்டு எடுக்க, அழைப்பு விடுக்கிறார். கொடையாக நமக்கு தந்த படைப்பை, பாதுகாக்க திருத்தந்தையும், ஆர்த்தடாக்ஸ் முதுபெரும் தந்தையும் சேர்ந்து, அனைவரும் பொறுப்புடன் செயலாற்ற, உலக செபநாள் 01-09-17 ல் செய்தி வெளியிட்டனர். எல்லையற்ற இலாப நோக்குடன், சுயநல வாணிக நோக்கில் சுற்றுச் சூழல் கட்டமைப்புக்கள் சீர் குலைப்பதை பொறுக்க, மறுக்க முடியாது என்கிறது அவர்களது செய்தி. நம் **தேசீயக்கவி பாரதி** "நன்று கருது" "பாதகம் செய்பவரைக் கண்டால் பயங்கொள்ளல் ஆகாது பாப்பா" என்றார் அன்பென்று கொட்டு முரசே அதில் யாவர்க்கும் விடுதலை உண்டு" என்றார்.

இயற்கை பேரிடர்களால் குறிப்பாக "தீ" சுனாமி நிகழ்வுகளை காணும் வேளையிலும், மனிதர்கள் உருவாக்கும் போர்களால் விளையும், தீமைகள் கண்டு இறைவன் கண்ணீர் வடிக்கிறார், என்கிறார் திருத்தந்தை. படைப்பை சீரழிப்பதை எம்மதமும் ஏற்கவில்லை. வருங்கால தலைமுறை மீது, நமக்கு கரிசனை வேண்டும்; சிந்திக்கும் காலமிது. பணச் சுரண்டல் "தீ" வைப்புக்கும் காரணம். திருத்தந்தையின் தலைமைப் பணி 5ம் ஆண்டு நினைவில் கூறுகிறார். அமைதியை உருவாக்குவதில் - அரசியல் தலைவர்களின் கடமையை, அமைதியைக் கட்டி எழுப்புவதில் இயற்கை மீது நாம் கொள்ளும் அக்கறையே மிக மிக முக்கியம் என்கிறார் திருத்தந்தை (22-1-17 நம்வாழ்வு).

***"தீ" க் குணம்:*** பூமி தண்ணீரில் ஒடுங்கும் - தண்ணீர் நெருப்பில் ஒடுங்கும் நெருப்பு காற்றில் ஒடுங்கும், காற்று வானில் ஒடுங்கும்; இவை யாவும் பிரகதி இறுதியில் ஒடுங்கும். இவை ஒன்றுடன் ஒன்று இணைந்து இருக்கும். படைத்தவரின் இயற்கை ஆற்றல் புதுமைச் சக்தி. ***தென் அமெரிக்கா சிலி நாட்டில்*** வறுத்தெடுக்கும் அனல் காற்று நெருப்புக் குழம்புகளைக் கக்கும். எரிமலைகள், நடுங்கும் குளிர்கள், எதிர் புதிரான இயற்கைச் சூழல்கள், வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள நாடும் பிரபஞ்சத்து படைப்புத்தான். உலகம் வெப்பமடைய அதனால், தப்பிக்க, பசுமை வாயுக்கள் எனப்படும் கார்பன்டை ஆக்ஸைடு, ஈத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு, ஹைடிரோ புளோரா கார்பன் போன்ற வாயுக்கள் உற்பத்தியே காரணம். அதன் வெப்பநிலை (தீப்பிழம்பு) மிக மிக அதிகம். தீ-நெருப்பு எரிசூளை-எரிதழல் - அனல் - அக்னி - என்பவை ஒரு பொருள் குறித்த ஐந்துமூலக் கூறில் ஒன்றான **நெருப்பையே** சுட்டும்.

**நற்செய்தியின் சாரல்:** "தீயை மூட்ட வந்தேன்" (லூக்.12:49,53; மத்.10:34-36) மண்ணில் தீயை மூட்ட வந்தேன் இப்போது அது பற்றி எரிய வேண்டும் என்ற விவேகம் இங்கு "தீயை" என்பது ஆன்மாவைப் புனிதப்படுத்துவது ஆகும். "பூமியின் மேல்" அக்னியைப் போட வந்தேன் அது இப்போது பற்றி எரிய வேண்டும் என்று விரும்புகிறேன்" (லூக்.12:49). பூமியின்மேல் அக்னியைப் போட வந்தேன் என்ற ஆண்டவர், நீயும் உன் குடும்பமும் பற்றி எரியவும், பிரகாசிக்கவும் விரும்புகிறார். "அக்னி" - ஒளிர்விட்டு பிரகாசித்தலை குறிக்கிறது. யேசுவை ஏற்க மறுத்தவர்களை "ஆண்டவரே! வானத்தில் இருந்து "தீ" கொண்டு வந்து, இவர்களை, அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா? என்று தன் சகோதரன் யோவானுடன் சேர்ந்து யேசுவிடம் கூறியவர் **யாக்கோபு** (லூக். 9:54). இதனாலேதான் இயேசு இவ்விரு சகோதரர்களை "***இடியின் மக்கள்***" (மாற்கு.3-1-17) என்று பொருள் தரும் "**பொவனேர்க்கேசு**" என்று எபிரேயச் சொல்லில் வழங்கினார். ***வானிலிருந்து அருங்குறி***. மாற்கு 8:11-13, மத்.12:38,39; லூக்.16:29; மத்.16:3, 18:8; 18:9 (நெருப்பு) சபிக்கப்பட்டவர்களை... நெருப்புக்குள் செல்லுங்கள். மத். 25:41-42 **பொதுத் தீர்வை** எரிநரகம். "தீ" மத்.1; 13-14; நரகம் மத்.18:39; மத்.5:29,30. லூக்.17:29 (வானத்தில் இருந்து தீயும் கந்தகமும் பெய்து எல்லாரையும் அழித்தது. தெற்கிலிருந்து காற்று அடிக்கும்போது மிகுந்த வெப்பம் (சூடு) உண்டாகும் என்கிறீர்கள் (லூக்.12:54-56; "நெருப்பும் புகையும்" (அப்.ப.2:19). சீனாய் மலையில் உள்ள பாலைநிலத்தில் எரியும் முட்புதரில் தழலில், வானதூதர் தோன்றினார். அக் காட்சியை கண்டு மோயிசன் வியப்புற்றார். (அப்.பணி. 5:30).கத்.திருச்சபை எப்படி விழா கொண்டாடல் பற்றி (லேவி.23:18,25) திருவெளிப்பாடு 2-ம்காட்சி: நெருப்பு மயமான பறவை நாகம் 12:3; தீ, புகை 14-10,11; நெருப்பு 20:9,10; நெருப்பு, புகை, கந்தகம் 9:17,18 (விடு.பய நூல் 4:5;8:10,19,16 நெருப்புத் தூண் 10:2;). - தொடரும்..

---



## பேராசிரியர் பா.வளன் அரசு முப்பால் முனைவர் விருது பெற்றார்!

உலகத் திருக்குறள் தகவல் மையத் தலைவர் பேராசிரியர் பா. வளன் அரசு திருவண்ணாமலை மாவட்டத்து செஞ்சி வட்டத்து நயம்பாடி திருக்குறள் பேரவையின் முப்பால் முனைவர் விருது பெற்றார். முனைவர் நயம்பு அறிவுடை நம்பியின் பவள விழாவை யொட்டி திருவண்ணாமலை மாவட்டத்து உலகத் திருக்குறள் பேரவையின் சார்பில் **பேராசிரியர் பா. வளன் அரசுக்கு முப்பால் முனைவர் விருதும்** முனைவர் வை.இராமசாமிக்கு திருக்குறள் பணிச் செம்மல் விருதும் செல்வன் இரகு அன்புச் செல்வனுக்கு முப்பால் மும்மணி விருதும் வழங்கப்பட்டன. மதுராந்தகம் திருக்குறள் பீடம் குரு பழனி அடிகளார் விருது வழங்கிப் பாராட்டினார். தூய யோவான் கல்லூரி முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் பா.வளன் அரசு ஏற்புரை ஆற்றினார். பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பெருவிழாக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பேராசிரியர் பா.வளன் அரசு பெறும் தொண்ணூற்று மூன்றாவது விருது இது என்பது குறிப்பிடத்தக்கது.



# உலக மீட்பர் காப்பியம்



பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.

## 18ஆம் படலம்

கொடிய கொள்ளை நோயாக வந்த ஐந்தாம் வாதையால், எகிப்தியரின் கால்நடைகள் இறந்தன. ஆனால், இசுரயேலரின் கால்நடைகளோ நன்றாக இருந்தன! இதன் மூலம் யாவே கடவுளின் கைவன்மை வெளிப்பட்டது; இஸ்ரயேலரை விடுவிக்கும் விண்ணகத் தந்தையின் திருவுளத்திட்டம் செயல்பட்டது!

50 **முல்லை நிலத்தில் கால்நடைகளைத் தங்கள் வாழ்வுக்கு ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் இடையர் இனமக்கலாவர். இவர்கள் பசுவைத் தாய்க்கு இணையாகக் கருதினர். அது தரும் பாலின் பெரும் பயனால் தங்கள் குழந்தைகளுக்குக் கோ (பசு) பால் எனப் பெயரிட்டனர். இறைமகன் இயேசுவின் பிறப்பும் மாடடைத் தொழுவில்தானே!**

அதனால் பசுவை இடையர் இனத்தவர்
        ஆத்தாள் என்று அழைத்தும் மகிழ்வரே;
மதன கோபால் என்றொரு பெயரை
        மதிப்புடன் சூடிக் கொண்டவர் சொல்வார்,
“இதமாய் இருக்குது கோபால் என்பதால்
        எனக்கிது பாலாய் இனிக்குது என்பார்;
முதலும் முடிவும் ஆன இறைமகன்
        முகமலர்ந் திடையர் தொழுவதில் பிறந்தார்!

(ஆத்தாள்-தாய், பாட்டி; மதன கோபால்-அழகு மிகுந்தவனும் பசுவின் இனிக்கும் பால்போன்றவனும் என்பது இப்பெயரின் பொருள்; இடையர் தொழுவதில் - ஆயர்கள் தங்கள் ஆடு, மாடுகள் அடைத்து வைப்பதற்குரிய கொட்டிலில்)

51 **யாவே கடவுளின் படைப்பில், மனிதவாழ்விற்குப் பெரிதும் பயனாக இருப்பவை அவர் படைத்தளித்துள்ள கால்நடைகள். அவற்றுள் ஆடுமாடுகள் மனித வாழ்விற்கு அடிப்படை ஆதாரங்கள்; உணவுக்கும் தொழிலுக்கும் இன்றியமயா தனவாக வேண்டப்படுபவை. அவை எகிப்து நாட்டில் யாவே கடவுளின் வாதைக்கு உட்பட்டு அழிந்தன!**

கால்நடை சாவு எகிப்தில் நிகழ்ந்ததால்
        கடும்இழப் பென்றதை எண்ணியே கதறினர்;
மால்மிகு பார்வோன் மனம் நடுக் குற்றான்
        மாடுகள் ஆடுகள் மடிந்ததைப் பார்த்தே;
பால்குடி குழந்தைக்(குப்) பால்இலை என்றே
சால்பெதும் இல்லாப் பார்வோன் இறுக்கம்
        தவிக்க வைத்ததே நாட்டினர் தம்மையே!

(மால்மிகு - அதிக மனமயக்கம், அறிவுகெட்ட மனநிலை; சால்பெதும் இல்லா - நாடாளும் பொறுப்புமிக்க மன்னனுக்கு இருக்க வேண்டிய நீதி, நேர்மை, நடுநிலைமை இல்லாத)

52 **எகிப்தியர் பசுமாடுகளைத் தெய்வப் பிறப்பாக நம்பி வணங்கி வழிபட்டனர். தங்கள் குடும்ப உறவிற்கு அவைகள் உரியனவாகவும், தங்கள் வாழ்விலிருந்து அவற்றைப் பிரித்துப் பார்க்க முடியாதனவாகவும் அவர்கள் பசுக்களை மதித்துப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்தனர்.**

கால்நடை வரிசையில் பசுக்களை மக்கள்
        கருத்துடன் வைத்து வணங்கியே வளர்த்தனர்;
பால்தரும் பசுக்களைத் தாய்க்கு இணையாய்ப்
        பார்த்துக் காத்தவை குடும்ப உறவிலே
மேல்நிலைக் குரித்தாய், தெய்வ இயல்பதாய்
        மதித்துத் துதித்துத் தூய்மையின் சின்னமாய்,
நால்திசை இருந்து வாழ்குடி யாவரும்
        நலிவுறா தவற்றைப் போற்றியே புரந்தனர்.

(கால்நடை வரிசையில் - மாடு, ஆடு, குதிரைகள், கழுதைகள், ஒட்டகங்கள் போன்றவைகளில்; புரந்தனர்-நோய் நொடியால் பாதிக்கப்படாமல் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாத்தனர்.)

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2018-2019 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் சந்தா எண்ணை தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.



# யோசிக்காமல் செயல்படுவதின் விளைவுகள்

–G. போனிபாஸ் ஜூலியன், புதுவை–9.

ஒரு பள்ளியில் எல்.கே.ஜி.வகுப்பிற்கு புதிதாக ஒரு ஆசிரியை சேர்ந்தார். அவர் நேரடியாக பயிற்சி முடிந்தவுடன் இப்பள்ளியிலே ஆசிரியையாக சேர்ந்தார். முன் அனுபவம் இல்லாதவர். ஆனால் பயிற்சியின் போது அநேக யுக்திகளை இவர்களுக்கு சொல்லிக் கொடுப்பார்கள். பொதுவாக சொல்வார்கள் புது துடைப்பம் நன்றாக பெருக்கும். அதைப் போல இந்த ஆசிரியை பள்ளியில் சேர்ந்த முதல் நாளிலியே தான் மிகவும் கண்டிப்பானவர் என்றும் பிள்ளைகள் ஒழுங்காக நேரத்தோடு பள்ளிக்கு வர வேண்டும் என்றும் அறிவுரை கூறினார். பிள்ளைகளுக்கு நான்கு வயது இருக்கும். இவளுடைய வகுப்பிலே ஏறத்தாழ 30 மணவச் செல்வங்கள் படிக்கிறார்கள். ஒரு வாரம் கடந்து பின்பு, குறிப்பிட்ட ஒரு பிள்ளை மட்டும் பத்து நிமிடம் தாமதமாக பள்ளிக்கு வந்தாள். இதை அந்த ஆசிரியை கண்டித்தார். நாளை முதல் நேரத்தோடு வர வேண்டும். அப்படி வரவில்லையென்றால், அடி உதை கிடைக்கும். மேலே குறிப்பிட்ட அந்தப் பிள்ளை அடுத்த நாள் 15 நிமிடம் தாமதமாக வந்தாள். அந்தப் பிள்ளைக்குக் கிடைத்தப் பரிசு பிரம்படி. தொடர்ந்து அதே பிள்ளையானவள், ஏறக்குறைய 30 நிமிடத்திற்கு தாமதமாக பள்ளிக்கு வந்தாள். மிகவும் கோபம் கொண்ட இந்த ஆசிரியை, அவளை அடித்ததுமல்லாமல் வீட்டிற்குச் சென்று அப்பா, அம்மா ஆகிய இருவரையும் அழைத்து வரும்படி அனுப்பி விட்டாள். சிறு பிள்ளை, நான்கு வயது, என்ன செய்வதன்று தெரியாமல் அழுது கொண்டே வீட்டிற்குச் சென்றது. அவர்களுடைய வீடு வெகு அருகில் இருந்ததால், பிரச்சனைக்கு வாய்ப்பில்லை.

சிறிது நேரம் கழித்து, அந்தச் சிறுமி, தந்தையுடன் பள்ளிக்கு வந்தாள். அப்போது அந்த ஆசிரியை அம்மா எங்கே, ஏன் வரவில்லை, ஆசிரியர் அழைத்தால் அப்பா, அம்மா இருவரும் ஓடி வருவார்கள். இதற்கு என்ன காரணம் என்று கேட்டார். உடனே அந்தப் பிள்ளையின் அப்பா, என் மனைவி வரமாட்டாள் என்று கூறினார். உடனே ஆசிரியை என்ன உங்க அம்மாவுக்கு அவ்வளவு தைரியம், நீங்கள் இருவரும் தாய், தகப்பன் ஒன்று சேர்ந்து வரவில்லை யென்றால், உங்கள் பிள்ளையை பள்ளியில் சேர்க்க மாட்டேன். T.C. கொடுத்துவிட்டு அனுப்பி விடுவேன் என்று மிரட்டினார். அந்தப் பிள்ளையும் அப்பாவும் ஒன்றும் சொல்லாமல் திகைத்து நின்றார்கள். அப்போது அந்தப் பிள்ளையின் அப்பா கூறினார். என் மனைவி இறந்துவிட்டாள். அவள் இறந்து ஒரு வாரம் ஆகிறது. அதனால்தான் கடந்த ஒருவாரமாக என் பிள்ளை தாமத மாக பள்ளிக்கு வருகிறது. திடீரென்று அவள் இறந்துவிட்டதால், என்னைச் சுற்றி இருள் சூழ்ந்தது. அவளுடைய போட்டோவைப் பார்த்துதான் என் பிள்ளைக்கு உடை உடுத்துவேன். அதனால் ஏற்பட்ட கால தாமதம் தான் என் பிள்ளையால் நேரத்தோடு பள்ளிக்கு வரமுடிவதில்லைஎன்று கண்ணீர் மல்க கூறினார். இதைக் கேட்ட ஆசிரியை கண்ணீர் விட்டு அழுதார்.

இப்போது அழுது என்னப் பயன். இதை முன்கூட்டியே அந்தப் பிள்ளையின் வாயிலாக தெரிந்துக் கொண்டு இருக்கலாம். எடுத்தேன், கவிழ்த்தேன் என்று அவசரப்பட்டு அந்த பிள்ளைக்கு தண்டனை கொடுத்திருக்க வேண்டாம். ஆசிரியர் பணி ஒரு உன்னதமான பணி. யாருக்கும் கிடைக்காத ஒரு பணி. ஏனெனில் ஆசிரியர்கள் கடவுளுடைய தூதர்கள். எதையும் சிந்தித்து யோசித்து முடிவு கூற வேண்டும். இன்று நம் மத்தியில் சிறப்பான தலைவர்கள் இருப்பதற்கு ஆசிரியர்கள்தான் காரணம். அவர்கள் நடமாடும் தெய்வங்கள் என்று கூறினால் மிகையாகாது.●

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-169

### செப்டம்பர் மாத (2017) சிறப்புப் போட்டியின் முடிவுகள்

சென்ற இதழ் தொடர்ச்சி...

**வலமிருந்து இடம்**

| | |
|---|---|
| 2.தண்டனையை | உரோ.2:5 |
| 3.கடவுள் | உரோ.3:3 |
| 6.கொண்டுள்ள | 2கொரி.1:24 |
| 7.பாவம் | உரோ.6:14 |
| 8.ஞானம் | 1கொரி.3:19 |
| 10.ஆண்டவரும் | 1கொரி.8:6 |
| 13.அச்சம் | 2கொரி.7:5 |
| 14.விதைக்கும் | 1கொரி.15:38 |
| 15.அடையாது | 1கொரி.13:4 |
| 19.நேரில் | 2கொரி.10:1 |
| 21.போக | 1கொரி.15:33 |

**கீழிருந்து மேல்**

| | |
|---|---|
| 4.அப்பம் | 1கொரி.10:17 |
| 9.செல்வம் | உரோ.11:33 |
| 10.ஆனார்கள் | உரோ.11:28 |
| 15.அமைதி | உரோ.3:17 |
| 17.இணையற்ற | 2கொரி.4:7 |
| 18.பேசுகிறோம். | 2கொரி.6:11 |
| 20.உடன் | 2கொரி.8:23 |
| 21.போது | 2கொரி.9:5 |

**பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்:** N.P. ஆரோக்கியமேரி பீட்டர், விமலா பேட்ரிக், Y.A. லில்லி, S.B. தெரசா ரீத்தா பெஞ்சமின், Y.P.இன்னாசியம்மாள் விமலா, K. ஜோசப் ஆரோக்கியமேரி, M. பெஞ்சமின், K.L. இஸபெல்லா லூர்துராஜன்–C.நம்மியந்தல், R. அற்புதசாமி Rtd. Tr,D. ஜோஸ்பீன் நிர்மலா–சோமனூர், S. கமலம், R. கிரேஸி ராபீன், X. அகஸ்டீன் மேக்ஸ்–திருச்சி, M.கிரேஸி முத்துசாமி, ரோஸ்லீன் சார்லஸ், கிரிஜா புரோஸ்பர், விவியான் இருதயராஜ்–பெரும்பண்ணையூர், Sr. சின்னராணி, Sr. செலீன்–அணிலாடி, L. ஜேம்ஸ் செல்வராணி, C. மோட்சம், C.M. அம்மு, லூயிஸ் ரோஜா, L.மேரி கிறிஸ்டி, A. ரோஸ்மேரி, A. அமலோர்பவமேரி, R. லில்லி புளோரா, A. ஸ்டெல்லாமேரி, Z.எலிசபெத் சக்கரையாஸ், D. அருள்சர்வின், C. ஆனந்த் ஜெயராஜ்–மங்கலம்பேட்டை, J. ரபேலினா எழிலரசி–தண்டாளம், C. கஸ்பார் Rtd. H.M.–இளையாங்கண்ணி, மதியழகி–ஈரோடு, A. சூசையம்மாள், L.ஆரோக்கியமேரி – கடலாடி, R.உத்தரியமேரி Rtd.Tr–வடக்கு செய்யூர், Sr.புளோரட்மேரி, E.ஆரோக்கியசாமி–உளூந்தூர்பேட்டை, S. அமல்ராஜ், A. ரோசாலிமேரி–வடலூர், S. பால்ராஜ்–மேட்டுப்பாளையம், Sr. மேரி லிடியா–பள்ளபாளையம், F. ஜெஸிந்தா – கொடுங்கால், M. லீலாமேரி ஜோஸ்பின் – வக்கம்பட்டி, S.ஹென்றிதாஸ்–வடக்குத்து, S. தனசீலி, A. மரியப்பன் Rtd. Tr.–விரியூர், Sr. மௌரீன் மேரி –தொண்டமந்தம்–G.பிலோமினா–திருப்பூர், B.மரிதெரஸ், ஜோஸ்பீன் வர்க்கீஸ்–ரெட்டியார்பாளையம், பெரியநாயகம் ஸ்தனிஸ்–அணையேரி, S.G. ஜோசப் ராஜமாணிக்கம், J. ஜோசப்பீன் சலேத்மேரி–மதுரை வின்ஸி டோமினிக் V.A. ரெஜினாமேரி, ஜோதசி அல்போன்சா–போத்தனூர். Sr.. அற்புதராணி, இமல்டா செல்வராயர், Sr. செலீன் இராயப்பன், Sr. லாரன்ஸ் செல்வநாதன்–திண்டிவனம், G. அந்தோணி Rtd.Tr, Sr. சிறியபுஷ்பம், ரிம்ஷி சேவியர், D. உபகாரமேரி–புதுவை, Y.புஷ்பா வெனிட்டா, M.செலீன், Y.மரிய மைக்கிள் ஜாக்சன், P.மரியதங்கம், V. ஜெரோசின், J.டெல்பின், இளங்கோ, T. பீட்டர்ராஜன், A. மலையப்பன், A. சகாய எல்ஸி, A. ஆனி பிரபா, A. அன்னம்மாள்– அழகப்பபுரம், மரியஸ்டெல்லாராஜ்–முருகம்பாக்கம், F. கிளாராமேரி பீட்டர் மலையப்பா, பிலிப் பீட்டர்ஜான் மலையப்பா, A. லூர்துநாதன்–வன்னியர்பாளையம், மேரி லொயலா திவ்யநாதன், S. புஷ்மேரி, A.C.பிலோமினா அகஸ்டஸ், Sr.R.கரோலீன்–கடலூர், A. செல்வராயர் சாந்தா, Sr. பிலோ, S.சவரிமுத்து Rtd.M.T. – சாத்திப்பட்டு, S. அமலி செல்வம் Tr–தாராபுரம், P.மரியசெல்வம் பொன்ராஜ், S. ரோஜா Tr, தேவ அன்னை, K. பால்ராஜ்–வால்பாறை, Sr. நெரீனாமேரி, Sr. எப்போனாமேரி–அரியாங்குப்பம், A. ஞானமணி சுவன. Tr.மாரம்பட்டி, S.M.செங்கோல் திரவியம், A. பாத்திமாராணி, Sr. மிரியம், Sr. செங்கோல்ராணி, இருதய விஜிலா, A. சாந்தா மரியா Tr, A. குளோரி லீனா–திண்டுக்கல், M.சிறியபுஷ்பம் Tr– திண்டுக்கல், Sr. பரிபூரணம், S. டெனிஸ்– A. வெள்ளோடு, A. அந்தோணியம்மாள், A. ரோஸ்லின் லியா, D. புளோராமேரி–இரண்டெல்லைப் பாறை, Sr.ரோக் ஜெயமேரி–கொசவப்பட்டி, Sr. பேபி–கமலாபுரம், S. அப்போலினியஸ்–தக்கலை, Sr. மேரி பாஸ்கல், Sr. மேரிஸ்டெல்லா, Sr. மரி கபிரியேல்–கும்பகோணம், ஞானம் சவரிராஜ்–பெரியவர்சீலி, Sr. செசீலியா–வாலகிரி, A. டேவிட் அருள்பிரகாசம்–கோவைப்புதூர், த.பா. ஆன்சலீன் டோமினிக், C. பால் டேனியல்–அரவங்காடு, Sr. ஜசிந்த்–சென்னை, S. ராணி இருதயராஜ்–பழையகோட்டை, I.R. எட்மெண்ட்–காளையார்கோவில், A. யூஜின் அமீத்தா–தஞ்சாவூர், லீலா அந்தோணி குருஸ்–ரோஸ்மவுண்ட், J.நோயல் அருள்தாஸ், A. அருள் சவரிநாதன், Sr.எப்ராஸியாமேரி – திருவாக் கவுண்டனூர், S.பெர்க்மான்ஸ்மேரி Tr, A. மோட்சராக்கினி, A. ஆரோக்கிய வில்லியம்ராஜ்–மங்கலம்பேட்டை, R. ஹெலன், S. ஆரோக்கியமேரி, செல்வராயன் மரிசெலீன், D. சகாயமேரி, P.டோரத்தி, A. சுசீலாராஜ், A. ஸ்டெல்லாராணி Tr.–நெல்லித்தோப்பு, M. மதலை இருதயமேரி, S. செல்வி எமல்டாமேரி, A. மோட்சமேரி Tr–சேலம் கேம்ப், Sr. ஜெயமேரி–ஆத்தூர், Sr. மேரி அல்போன்ஸ்–விரகனூர், Sr. அல்போன்ஸ்–திருமங்கலம், ஜஸ்டீன் ஆனந்தம்–மாடம்பாக்கம், நிர்மலா, S. பீட்டர்பால் இன்பராஜ், S.L.மரியதாஸ், L.ஜான்மேரி ஜெரோம், N.பெரியநாயகமேரி, S. ரெஜினா–நெய்வேலி, L.லிட்டில் ப்ளவர், A. மரிய கிறிஸ்துராஜ் Rtd.H.M., A. உபகாரசாமி, S. ஜான் பிரிட்டோ–விழுப்புரம். A. லில்லி ஜாக்குலின், C. ஐசக்–கீழ்ப்பெரும்பாக்கம், J.ஷீபா இருதய பாத்திமா, A. ஹெலன் வின்செண்ட்–அவிநாசி, பிலோமினா சத்தியநாதன், N. ஜோசப்பின் வசந்தி, J.ராஜபாக்கியம்–தேனி, S. அமலி – இராயப்பன்பட்டி, பாத்திமா ராபர்ட், A. அமல விஜயராணி–A. வெள்ளோடு, S. சந்தியாகு Rtd.H.M. A. அல்போன்சாமேரி Rtd Tr– நாரணம்பாளையம், J. செல்வி சுகுமார்–அழகப்பபுரம், A. அருமைராஜ்–காந்திகிராமம், A. பிரான்சிஸ் அலாய்சியஸ்–கே.கே.நகர், A. ஜோசப்–பெங்களூர், M.செபஸ்டியன்–மதுரை, P. விஜயக்குமார்–பாக்குமுடையான்பட்டி, A. மார்சல்–பெரியநாயக்கன்பாளையம், Sr. லில்லி, Sr. கிறிஸ்டீனா, Sr. மேரி ஆன்சலா, –சிவகங்கை, மாதரசி ஜோசப், பத்ரிசியா–உப்பளம்.

தொடரும்..

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியில் சமூகத் தொடர்புக் கருவிகள் பற்றிய விதித் தொகுப்பு.

Degree on the instruments of Social Communication.

**- சகோ. மரிய சலேத், சென்னை.**

சமூகத்தொடர்புக் கருவிகள் வாயிலாக மனித வாழ்க்கையில் மிக நுணுக்கமான முறையில் மாற்றத்தை பண்பாட்டிலும், நாகரிகத்திலும் ஏற்படுத்தியுள்ளது. எனினும் இத்துறை மனிதரின் அறிவு வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுவதைவிட, அதிகமாக பொழுதுபோக்குத் துறையாகவே வளர்ந்து வருகிறது. சமூகத் தொடர்புக் கருவிகள் வளர்வதையும் பரவுவதையும் யாராலும் நிறுத்த முடியாது. இத்துறையைவிட்டு விலகி நிற்கவும் முடியாது. இத்துறையை அணுகி, நுணுகி ஆராயவும், ஆக்கத்திற்கு உரியதாக மாற்ற காலத்தின் கட்டாயமாகிவிட்டது. சமூகத் தொடர்புக் கருவிகள் கடவுளின் கொடைகள். இக்கொடைகள் சமுதாயத்திற்கு நன்மை பயக்க வேண்டும்.

முதலில் சமூகத் தொடர்புக் கருவிகள், “வியப்புக்குரிய பல என்னும் ஏடு விவாதிக்கப்பட்டது. பின்னர் இப்பொருள் பற்றி வெளிவந்த “ஒன்றிப்பும் முன்னேற்றமும்”, “புதுயுகம்” போன்ற ஆவணங்கள், சமுதாயத்துக்குரிய கடமைகள் பற்றி கருத்துகளை எடுத்துரைத்தன. இன்று இந்த மூன்று ஆவணங்களையும் ஒரு சேரப் பார்த்தால் சமூகத் தொடர்புத் துறை பற்றிய திருச்சபையின் கண்ணோட்டத்தை உணரலாம். இந்த அறிக்கை இரண்டு தலைப்புகளையும், 24 எண்களையும் கொண்டது.இந்த அறிக்கையின் மையப் பொருள்கள்.

1) சமூகத் தொடர்புக் கருவிகள் மனிதர்க்கு ஓய்வு அளிக்கவும், உள்ளத்தைப் பண்படுத்தவும் இறையாட்சியைப் பரப்பி நிலைநிறுத்தவும் மீட்புச் செய்தியை அறிவிப்பதற்கும் உறுதுணையாயிருக்கின்றன (எண்.33)

2) சமூகத் தொடர்புக் கருவிகள் அறிவிக்கும் முறை நேர்மையானதாகவும், பொருத்தமானதாகவும், ஒழுக்க நெறிகளையும், தனி மனிதரின் முறையான உரிமைகளையும் மாண்பையும் நுணுக்கமாக காக்க வேண்டும் (எண்.5)

3) சமூகத் தொடர்புக் கருவிகளை அளவோடும், கட்டுப்பாட்டோடும் பயன்படுத்தி பார்ப்பவை, கேட்பவை, வாசிப்பவை பற்றி ஆழ்ந்தறிந்து, ஒழுக்கநெறிகளை, அறநெறி விதிகளை பின்பற்ற வேண்டும் (எண்.10). தீங்கு விளைவிக்கும் வெளியீடுகள், காட்சிகள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பதில் தனிகவனம் செலுத்தப்பட வேண்டும் (எண் 12).

4) ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளை திறமையோடும் திருத்துாது உணர்வோடும் நிறைவேற்றி, தொழில் நுட்பம், பொருளியல், பண்பாடு கலை ஆகியத் துறைகளில் திருச்சபை செய்திகளைப் பரப்பி அவற்றுக்கு ஏற்ற விளக்கமும் தரவேண்டும். (எண் 13,14). ●

# இறை ஊழியர் லூயி சவினியன் துப்புய்

– பொறிஞர் ஞா. ஆண்டோ, புதுவை–1.



**பங்கு தலங்களில் பணி:** 1853 முதல் 1855 வரை நெல்லித்தோப்பு பங்கு தந்தையாகவும் 1856 முதல் 1859 வரை உழவர்கரை பங்கு தந்தையாகவும் பணியாற்றினார். இந்த இரண்டு ஆண்டு பங்குகளில் பணியாற்றிய அனுபவத்தின் அடிப்படையில் "இல்லற உத்தியானம்" எனும் நூலினை எழுதினார்.

**ஆயர் கிளமெண்ட் போனான் மறைவு:** பாண்டிச்சேரி மறைமாவட்ட ஆயர் கிளமெண்ட் போனான் தன்னுடைய மேய்ப்புப் பணியின் சுற்றுப் பயணத்தின் போது நோயினால் மிகவும் அவதிப்பட்டு பனாரஸில் 21-03-1861 அன்று காலமானார். 22-03-1861 அன்று வாரனாஸியில் ஆயர் கிளமெண்ட் போனான் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

22-3-1861 அன்று பாண்டிச்சேரியில் நடந்த மரித்தோர் அடக்க பூசையில் துப்புய் அடிகளார் ஆற்றிய அடக்க-பிரசங்கத்தில் "போனான் ஆண்டகை தன் முதிர்ந்த வயதில் மேற்கொண்ட சுற்றுப்பயணம் தன் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடும் என முன்கூட்டியே கணித்திருந்தார். இருந்தாலும் பின்வாங்காமல் இறை சித்தத்திற்குக் கீழ்ப் படிந்து பயணத்தை மேற்கொண்டார். இறுதியில் இந்திய கிறிஸ்துவ சமயத்திற்காகத் தன் இன்னுயிரைத் தியாகம் செய்தார்" என்று குறிப்பிட்டார். பாண்டிச்சேரியில் நடந்தது போல் பெங்களூர், வேலூர், காரைக்கால், திருச்சி ஆகிய இடங்களில் மரித்தோர் அடக்கம் பூசை நிறைவேற்றப்பட்டது.

**துப்புயின் ஆண்டறிக்கைகள்:** 22-12-1860 தேதியிட்ட ஆண்டறிக்கையில் கிறிஸ்துவ மக்கள் தொகை, கிறிஸ்துவரல்லாதோர் மக்கள் தொகை, மதம் மாறிய பெரியவர்கள், குழந்தைகள், புராட்டஸ்டண்ட் குருக்கள், மறைபணியாளர் ஆலயங்கள் மருத்துவமனைகள், தங்கும் விடுதிகள், குருமடங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பட்டியலில் சாகும் தருவாயிலுள்ள ஹிந்து மக்கள் தொகையையும் குறிப்பிட்டிருந்தது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. தன்னுடைய அறிக்கை முழுமையாக இருக்க வேண்டும் என்பதில் துப்புய் அடிகளார் உறுதியாக இருந்தார் என்பது தெளிவாகிறது. மக்கள் பலர் இறந்தாலும் உயிர் விடுகின்ற நேரத்தில் தேவதிரவிய அனுமானங்களைப் பெற்று இறந்தவர் எண்ணிக்கை குறைவாக இருந்தது கவலை அளிக்கிறது என்றும் பல ஆலயங்கள் பழுதடைந்துள்ளன என்றும் புராடஸ்டண்டு களின் மறை எதிர்ப்பு பிரசாரங்கள் என்றும் பல அரிய தகவல்கள் இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

31-12-1867 தேதியிட்ட ஆண்டறிக்கையில் பள்ளி குழந்தைகளின் கல்வியில் கவனம் செலுத்த வலியுறுத்தி யதையும் ஓர் ஆங்கில வழிப் பள்ளி தொடங்கப்பட வேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டுள்ளார். தேவாலயங்கள் கட்டுமுன் உரிய அனுமதி பெறவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மறைபணியாளர்கள் தருமம், சமாதானம், ஒற்றுமை, நல்லெண்ணம் போன்ற நற்சிந்தனை யோடு வாழவேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் எத்தனை பேர் திருமுழுக்கு, ஒப்புரவுச் சாதனம், புதுநன்மை, உறுதிப்பூசுதல் போன்ற வற்றைப் பெற்றுள்ளனர் என்ற புள்ளிவிபரத்தைப் பதிவு செய்துள்ளார். கொத்தடிமைகள் எத்தனை பேர் திருமுழுக்கு பெற்றுள்ளனர் அதில் எத்தனை பேர் இறந்துள்ளனர் போன்ற தகவல்களும் அடங்கும்.

**துப்புய் அடிகளார் தோற்றுவித்த புனித வின்சென்ட் தே பால் சபை:** துப்புய் 1852இல் புனித வின்சென்ட் தே பால் சபையைத் தோற்றுவித்தார். அவருக்கு ஜூலியன் சார்லஸ், லெஹோதி மற்றும் பிரான்சுவா ஜோசப் திரியோன் ஆகிய மறைபணியாளர்கள் உதவினார்கள்.

இச்சபை உறுப்பினர்கள் பணக்காரர்களிடம் இருந்து ஆடைகள் போன்றவற்றைப் பெற்று சுமார் 450 ஏழைகளுக்குக் கொடுத்தார்கள்.

**துப்புய் அடிகளார் தோற்றுவித்த மரியன்னையின் தூய இதய பிரான்சிஸ்குவின் சகோதரிகள் சபை:** துப்புய் வாழ்ந்த காலத்தில் தமிழ்ச் சமுகத்தில் பெண்கல்வி அலட்சியப்படுத்தப்பட்டிருந்தது. சிறுமிகள், நாகரிக மங்கையர், பெண்கள் முதலானோர் கல்வி கற்காதவர்களாக இருந்தனர். விதிவிலக்காகச் சில பெண் கவிஞர்கள் இருந்தனர். குழந்தைத் திருமணங்கள் குறிப்பாகப் பணக்கார மற்றும் உயர் சாதிக் குடும்பங்களில் எந்த விதத் தடையுமின்றி நடந்தன. பாண்டிச்சேரியின் 1867 இன் மக்கள் கணக்கெடுப்பின்படி பதிவான 199 பதிவு பெற்ற திருமணங் களில் 183 மணப் பெண்கள் 12 வயதிற்குக் குறை வாயிருந்தனர். அந்தக் கால பிரஞ்சு அரசாங்கச் சட்டப்படி திருமண வயது ஆண்களுக்கு 18 உம் பெண்களுக்கு 16 உம் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இதனால் அவர்கள் மூடநம்பிக்கையில் மூழ்கியிருந் தார்கள். அவர்கள் மிகவும் மோசமான பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள். குருக்கள் பேரவை (Synod) கூட்டத்திற்கு வந்தவர்கள் பெண்களின் இந்த இழி நிலை குறித்து விவாதித்து பெண் கல்விக்கு ஒரு நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என முடிவெடுத்தனர்.

அந்தப் பொறுப்பு துப்புய் அடிகளாருக்குக் கொடுக்கப் பட்டது. இரண்டாவது பேரவைக் கூட்டம் 1849இல் நடந்தது. அதில் துப்புய் பெண் கல்வி என்பது பெண்களை முன்னேற்றவும் அவர்கள் திருமணம் முடித்து தாய்மை அடையும்போது குடும்பக் கல்வியில் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அவர்களின் பங்கின் காரணமாக கல்வியின் வளர்ச்சி அதிகமாக இருக்கும் எனவும் கருத்துத் தெரிவித்தார். இதனால் இந்தியக் கன்னியர் சபைகள் பெண் கல்விக்குப் பாடுபட வேண்டும் என்று ஆயர் போனான் 1844 இல் முடிவெடுத்தார்.

துப்புய் ஆயரின் ஆலோசனைக் குழுவின் அனுமதியோடு மரியன்னையின் தூய இதய பிரான்சிஸ்குவின் சகோதரிகள் சபையை (Congregation of Immaculate Heart of Mary) 16-10-1844 அன்று பாண்டிச்சேரியில் தொடங்கினார். பாண்டிச்சேரி புனித தெரேசா வீதியிலிருந்த ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கே இச்சபை தொடங்கப்பட்டது. தொடர்ந்து பெண்களுக்கான மரியன்னையின் தூய இதய பெண்கள் பள்ளி (Immaculate Heart of Mary Convent) 17-10-1844 அன்று தொடங்கப்பட்டது. இந்த சபை துவங்கப்பட்ட செய்தியை 16-10-1844) அன்று பாரிஸ் மிஷனுக்குத் தெரிவித்தார்.

காலவோட்டத்தில் இப்பள்ளி இளைஞர் கல்வியில் புகழ் பெற்றது. மாணவர்கள் சபையில் தங்கிப் படிக்க 1851 இல் ஏற்பாடு செய்யப்பட்டது. 1857இல் உள்விடுதி மாணவர்கள் 25 பேரும் 100 வெளி மாணவர்களும் கல்வி கற்றனர். இமாகுலேட் சபை கன்னியரின் தொண்டு செய்தித் தாள்களிலும் புகழப்பட்டது.

சேலம் போன்ற தமிழகப் பகுதியிலிருந்தும் அயல்நாடு களுக்குச் சென்று பணியாற்றிய பாண்டிச்சேரிக்காரருடைய பிள்ளைகளும் - துப்புய் தொடங்கிய பள்ளிகளில் மாணவர்களாகப் படித்த வரலாறு துப்புய் மற்றும் இமாகுலேட் சபையின் புகழை இன்றும் பாடிக் கொண்டிருக்கின்றது.

தொடரும்..

## விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

பிறப்பு: 26-04-1934



இறப்பு: 31-01-2018

### திருமதி. S.இராஜம்மாள்

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 10-2-2018 காலை 5.30 மணிக்கு முகையூர், புனித சவேரியார் ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படுகிறது.

திருப்பலி அன்புடன் அழைக்கும்

கணவர்:திரு. M. சந்தியாகு, (Retd. H.M.)
மகன்கள்:Rev.Fr.S. அந்தோணிசகாயம், (Late)
திரு. S.எட்வர்ட் மோசஸ்-திருமதி. சகாயமேரி,
Rev.Fr.S. ஜான் போஸ்கோ, CPPS
பங்குதந்தை, சட்ராஸ் - கல்பாக்கம்.
திரு.S.பவுல் சுந்தர் Tr.-திருமதி. கீதா ரீட்டா H.M
மகள் - மருமகன்: திரு. A.அருள்ராஜ் Tr.-
திருமதி. S.லில்லி பிரான்சிஸ்காTr.
மற்றும் பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

முகையூர்.

## விண்ணக வாழ்வின் 25-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :12-05-1943



மறைவு: 12-02-1993

### திரு. M.சின்னதுரை, M.A.,M.Ed.,(Tr)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 12-2-2018 காலை 6.00 மணிக்கு ஆற்காடு, புனித சவேரியார் ஆலயத்தில் பங்குதந்தை ஜஸ்டின் ஆரோக்கியராஜ் அவர்களால் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

மனைவி: J. பவுலின்மேரி, (Retd. H.M.)
(மரியாயின் சேனை வளர்ச்சிப் பணியாளர்)
மகன்கள், மருமகள்கள்,
மற்றும் பேரக்குழந்தைகள்.

ஆற்காடு.

**2018 ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை குறித்து கத்தோலிக்கர்:** இந்திய மத்திய அரசு தாக்கல் செய்துள்ள 2018ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், ஏழை கள் மற்றும் தலித் மக்களின் நலனுக்காக, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகின்ற அதே வேளை, இவை அமல் படுத்தப்படுவதை, பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று, இந்திய கத்தோலிக்க அதிகாரி கள் தெரிவித்துள் ளனர். மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி அவர்கள் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கை குறித்து ஆசியச் செய்தியிடம் கருத்து தெரிவித்த, தலித் கிறிஸ்தவர் உரிமைகள் கழகத்தின் ஒருங் கிணைப்பாளர், இயேசு சபை அருள்பணி Axj Bosco அவர்கள், இந்த அறிக்கையில், கிராமப்புற ஏழைகள் மீது சிறப்பான கவனம் செலுத்தப்பட்டிருப்பதை உணர முடிகின் றது என்று கூறினார். மேலும், நிதிநிலை அறிக்கையிலுள்ள தேசிய நலவாழ்வு பாதுகாப்பு திட்டம், சிகிச்சை பெறுவதற்கு வசதியற்ற, பத்து கோடி ஏழை குடும்பங் களுக்கு உதவுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஆயினும், இதற்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகை, பகிரப்படும் முறை குறித்து விழிப்பாயிருக்க வேண்டும் என்று, இந்திய காரித்தாஸ் இயக்குனர் அருள் பணி Frederick D'Souza அவர்கள் கூறியுள் ளார். இதற்கிடையே, இந்திய தேசிய நலவாழ்வு பாதுகாப்பு திட்டம், வருகின்ற அக்டோபர் 2ம் தேதி முதல் அமல் படுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தில், ஒரு குடும்பத்திற்கு, ஆண்டுக்கு, ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமான மருத்துவ உதவிகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இது, 2018ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், உலக அளவில் பரவலாக பேசப்படும் பெரிய திட்டம் எனவும் கூறப்பட்டுள்ளது. -AsiaNews

## இறைமகிமையில் 8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தெய்வத்திரு.

### C.M.லூர்துநாதன்

Rtd.HM. (MRIC) விழுப்புரம்.

| மண்ணில் மலர்ந்தது: | விண்ணில் மலர்ந்தது: |
|---|---|
| 09-05-1936 | 11-02-2010 |

இறைவா! நாளிரண்டு
வருடங்களாய் உம்மில் தஞ்சம்
அடைந்துள்ள எம் தந்தை
ஊ.ஆ. லூர்துநாதன்
ஆன்மாவை உம்பதம் ஏற்று
அவர்தாம் செய்த
நற்காரியங்கள் பொருட்டு
குற்றங்கள் நீக்கி உம்மில்
நிலைத்திருக்கச் செய்யும்
அப்பா.

துயருறும்

மகன்: லூ.லியோ பிரான்சிஸ் சேவியர்
மற்றும் C.M.குடும்பத்தினர்,
விழுப்புரம்.

குறிப்பு: 11-2-2018 ஞாயிறு அன்று காலை மணிக்கு விழுப்புரம், கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

## விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு :18-03-1936



இறப்பு: 13-02-2015

### திரு.S.அந்தோணிசாமி (Retd.JIPMER)

"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம்" (உரோமை.14:8)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 13-2-2018 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு, கொடுங்கால், புனித பாத்திமா அன்னை ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு புதுவை நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

மனைவி:திருமதி.A.தவமரி அந்தோணிசாமி
மகன்கள்:Dr.A. ஜேம்ஸ், A. ராபர்ட் அலெக் சாண்டர், A. இயேசுராஜா சாம்சன், Tr;
மகள்: A. ராணி ரோசரி, Tr. மருமகன், மருமகள்கள், பேரப்பிள்ளைகள், உடன் பிறந்தோர், உறவினர்கள்.

கொடுங்கால்.



திரு. **கர்லோஸ் மரி அந்தோனி**

**தோற்றம் : 24-04-1949**

**மறைவு : 11-02-2016**

# விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
– யோவான்.11:25

**ஜெபம்**

இரக்கம் மிகுந்த இயேசுவே இறைவா! உமது அன்பு மகனாக எங்கள் குடும்பத்தின் நேசமுள்ள தலைவராகவும், ஒளியாகவும், பாசமிக்கவராகவும் எங்களை நேசித்து, எங்களுடன் வாழ்ந்து உம் திருப்பாதம் அடைந்த உம் அடியார்

## திரு. கர்லோஸ் மரி அந்தோனி

அவர்களுக்கு முடிவில்லா விண்ணக வாழ்வையும் நித்திய ஒளியையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.

**பிரிவால் துயருறும்**

**ஞானப் பிள்ளைகள்**

**சாந்தி, டெல்பின், கத்ரீன்**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 11-02-2018 ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு புதுவை, தூய ஜென்மராக்கினி அன்னை பேராலயத்திலும், புதுவை திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலும், வில்லியனூர் லூர்து மாதா திருத்தலத்திலும் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் யாவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

---



மதாம் **தெரேசா முத்தப்பா**

**தோற்றம் : 09-02-1918**

**மறைவு : 21-11-2012**

# பிறந்த நூற்றாண்டு நினைவு

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
– யோவான்.11:25

திசைநோக்கிப் போற்றுகிறோம்!
மண்ணிலிருந்து நீங்கினாலும் எங்கள்
மனமிருந்து நீங்கவில்லை!
கண்ணிருந்து நீங்கினாலும எங்கள்
கருத்திருந்து நீங்கவில்லை!
எண்ணிறந்த நன்மைகளால் எம்மை
ஏற்றமுறச் செய்தவனே!
தண்ணிறைந்தச் சொற்களால் நின்றன்
திசைநோக்கிப் போற்றுகிறோம்!
பொன்னிறத்து இயேசுவின் அருமைப்
பூவடியில் அமர்ந்தவளே!
நன்றிருக்க நாங்கள்தான் அவரின்
நல்லடியில் வேண்டுமம்மா!

**பிரிவால் துயருறும்**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

**திருப்பலி : 9-2-2018**

காலை 5.30 மணிக்கு புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயம்.
காலை 6.00 மணிக்கு வில்லியனூர், லூர்து மாதா திருத்தலம்.
காலை 6.00 மணிக்கு உப்பளம், புனித சவேரியார் ஆலயம்.
காலை 6.30 மணிக்கு பெரும்பண்ணையூர், புனித சூசையப்பர் ஆலயம்.
காலை 5.30 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்கா.

# உதயமாகிறது புதிய உரோமைத் திருப்பலி நூல்

## (14-02-2018 - சாம்பல் புதன் முதல்)

- தொகுப்பு: - ஆசிரியர்.

**செ**பமே வாழ்வு, வாழ்வே செபம் என்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஒரு அடிப்படைப் பாடம். எனவேதான், காலையில் கண் விழிக்கும்போதும், இரவில் உறங்கும் முன்பும், ஒவ்வொரு நாள் பணியின்போதும் நாம் சிலுவை அடையாளம் வரைய நம் பெற்றோர் நம்மை பழக்கியுள்ளனர். அதைப்போலவே, "காலையில் எழுந்ததும் கடவுளைத் தொழு"என்ற முதுமொழிக்கு ஏற்ப, காலைத் திருப்பலியில் பங்குபெறவும் பழகியுள்ளோம்.

திருப்பலியே சிறந்த செபம். இயேசுவின் கல்வாரிப் பலி, இரத்தம் சிந்தாத வகையில் திருப்பலி பீடத்தில் புதுப்பிக்கப் படுகிறது; இதுவே திருப்பலி. இதற்கான சடங்கு ஒழுங்குமுறைகள், செபங்கள், மன்றாட்டுகள், அடையாளங்கள், ஆகியன உரோமை "திருப்பீடத்தால்" விவிலிய, இறையியல், வரலாற்று, வழிமரபு பின்னணியில் வகுத்து அளிக்கப்படுகிறது.திருப்பலி சடங்கு நூலின் பின்னணியில் நூற்றுக்கணக்கான அருளாளர்கள், நிபுணர்களின் உழைப்பும் அக்கறையும் தாங்கி நிற்கிறது. கதிரவன் தோன்றும் திசை முதல், மறையும் திசை வரை உலகெங்கும் ஒரே திருப்பலி முறைதான். எனவே, உரோமைத் திருப்பீடம் திருத்தந்தையின் வழிகாட்டலில் திருப்பலி நூலை வகுத்து அளிக்கிறது, திருத்தி அமைக்கிறது.

புதிய உரோமைத் திருப்பலி நூல் இனிய செந்தமிழில், திருப்பலி கொண்டாட்டத் தலைமையும் இறைமக்களும் சிறப்பாக பங்கெடுக்கும் வகையில் வனைந்து வழங்கப்பட்டுள்ளது. புனித திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்களால் 2001-ஆம் ஆண்டு மார்ச் 20-ஆம் தேதி ஒப்புதல் வழங்கப்பெற்று, ஏப்ரல் 25, 2001-ம் ஆண்டு வெளிவந்த "Liturgiam Authenticam" - என்ற கொள்கைத் திரட்டு வழங்கும் வழிகாட்டலில் இப்"புதிய உரோமைத் திருப்பலி நூல்" அமைக்கப்பட்டுள்ளது. இத்திருப்பலி நூலில் காணப்படும் மாற்றங்கள் இங்கே வழங்குகிறோம்.

### புதிய திருப்பலி நூலில் காணப்படும் மாற்றங்கள்.

### 1. புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள்

பழைய திருப்பலி நூலில் இல்லாது புதிய நூலில் இணைக்கப் பட்டுள்ளவைக் கீழேத் தரப்பட்டுள்ளன.

### 1.1 உரோமைத் திருப்பலி நூலின் பொதுப்படிப்பினை

இது 1969-லிருந்து பல மாற்றங்களுக்கு உட்பட்டு இன்று இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு புதிதான ஒரு சீரமைப்பைப் பெற்றிருக்கிறது:

| 1993 முன்னுரை (15) +341=356) | | 2008 (399 எண்கள்) | |
|---|---|---|---|
| இயல் | எண்கள் | இயல் | எண்கள் |
| முன்னுரை | 1-15 | முன்னுரை | 1-15 |
| 1 | 1-6 | 1 | 16-26 |
| 2 | 7-57 | 2 | 27-90 |
| 3 | 58-73 | 3 | 91-111 |
| 4 | 74-252 | 4 | 112-287 |
| 5 | 253-280 | 5 | 288-318 |
| 6 | 281-312 | 6 | 319-351 |
| 7 | 313-325 | 7 | 352-367 |
| 8 | 326-341 | 8 | 368-385 |
| | | 9 ஆயர்கள், ஆயர் பேரவை களின் அதிகாரத்திற்கு உட்பட்டதழுவியமைத்தல். | 368-399 |

### 1.2 திருவிழிப்புகள்

| 1993 (4) | 2008 (8) |
|---|---|
| 1. கிறிஸ்து பிறப்பு | 1. ஆண்டவரின் பிறப்பு<br>(2.) ஆண்டவரின் திருக்காட்சி. |
| 2. ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு | 3. ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு<br>(4.) ஆண்டவரின் விண்ணேற்றம். |
| 3. பெந்தக்கோஸ்து ஞாயிறு | 5. பெந்தக்கோஸ்து ஞாயிறு<br>(6.) திருமுழுக்கு யோவானின் பிறப்பு<br>(7.) புனிதர்கள் பேதுரு, பவுல் திருத்தூதர்கள். |
| 4. புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு | 8. புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு. |

### 1.3 சிறப்பு இணைப்பு

1. இசையோடு கூடிய பாடங்கள்

### 1.4 உரோமைப் பொது ஆண்டுக் குறிப்பேடு

**ஜனவரி**

**3 இயேசுவின் தூய்மைமிகு பெயர்**

27 புனிதர்கள் திமொத்தேயு, தீத்து - ஆயர்கள் நினைவு

**பெப்ருவரி**

8 புனித ஜோஸபின் பக்கீத்தா - கன்னி. நினைவு

**ஏப்ரல்**

23 புனித அடால்பெர்ட் - ஆயர், மறைச்சாட்சி

28 மான்போர்ட் நகர்ப் புனித லூயிஸ் மரிய கிரிஞ்சோன்- அருள்பணியாளர்.

**மே**

**13 புனித பாத்திமா நகர்ப் புனித கன்னி மரியா**

21 புனித கிறிஸ்டோபர் மகல்லானஸ்-அருள்பணியாளர், தோழர்கள்- மறைசாட்சியர்.

22 காசியா நகர்ப் புனித ரீத்தா - துறவி.

**ஜூலை**

9 புனித அகுஸ்தின் சவோ ரோங் - அருள்பணியாளர். தோழர்கள் - மறைசாட்சியர்

20 புனித அப்போலினாரிஸ் - ஆயர், மறைச்சாட்சி

24 புனித ஷார்பெல் மாக்லூப் - அருள்பணியாளர்.

**ஆகஸ்டு**

2 புனித பீட்டர் ஜூலியன் எய்மார்டு - அருள்பணியாளர்

9 சிலுவையின் புனித தெரசா பெனடிக்டா - கன்னி, மறைச்சாட்சி

12 புனித ஜேன் பிரான்செஸ் தெ ஷாந்தால் - துறவி.

**செப்டம்பர்**

9 புனித பீட்டர் கிளாவர் - அருள்பணியாளர்.

**12 மரியாவின் தூய்மைமிகு பெயர்**

**23 பியத்ரெல்சினா நகர்ப் புனித பியோ**-அருள்பணியாளர். நினைவு

**அக்டோபர்**

**11 புனித 23-ஆம் ஜான் - திருத்தந்தை**

**22 புனித இரண்டாம் ஜான் பால் -திருத்தந்தை.**

**நவம்பர்**

25 அலெக்சாந்திரியா நகர்ப் புனித கத்திரின் - கன்னி, மறைச்சாட்சி.

**டிசம்பர்**

9 புனித ஜான் டியேகோ கௌற்லாற்றோயாற்சின்

12 புனித குவாதலூப் நகர்ப் புனித கன்னி மரியா.

- தொடரும்...

("புதிய உரோமைத் திருப்பலி நூல்-ஓர் அறிமுகம்" நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.)

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.